### ஆ. நோய் மேலாண்மை

| | |
|---|---|
| **விதை நேர்த்தி** | டால்கம் பவுடர் கொண்டு தயாரிக்கப்பட்ட டிரைக்கோடெர்மா விரிடியை 4 கிராம், ஒரு கிலோ விதைக்கு) (அ) *சூடோமோனாஸ் ப்ளுரசன்ஸ்* (10 கிராம் , ஒரு கிலோ விதைக்கு) (அ) கார்பன்டாசிம் (அ) திரம் (2 கிராம், ஒரு கிலோ விதைக்கு) என்ற விகிதத்தில் கலந்து விதைத்தல் வேண்டும். |

| நோய்களின் பெயர் | கட்டுப்படுத்தும் முறை |
|---|---|
| **வாடல் நோய்**<br>*ப்யூசேரியம் ஆக்ஸிஸ்போரம்*<br>வகை *சிசரி* | *சூடோமோனாஸ் ஃபுளுரசன்ஸ்* 2.5 கிலோ , ஒரு ஹெக்டேர் என்ற விகிதத்தில் மண்ணிற்கு இடுதல். |
| **வேரழுகல் நோய்**<br>மேக்ரோஃபோமினா பேசியோலினா<br>(ரைசக்டோனியா பட்டாடிகோலா) | **உயிரியல் முறை கட்டுப்பாடு**<br>*சூடோமோனாஸ் ஃபுளுரசன்ஸ்* ஒரு ஹெக்டேருக்கு (அ) டிரைக்கோடெர்மா விரிடியை (2.5 கிலோ) இதனை 50 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது மணலுடன் கலந்து விதைத்த 30 நாட்களுக்கு பிறகு மண்ணில் இடவேண்டும்.<br>**இரசாயன முறை**<br>கார்பன்டாசிம் ஒரு கிராம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து பாதிக்கப்பட்ட இட’களில் வேர்பாகம் நன்கு நனையும்படி ஊற்ற வேண்டும். |